DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No.29/2015
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW 1

Name : Saraswathy

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 8th April 2026.

குறுக்கு விசாரணை

1ம் எதிரி நாராயணன் எனது அக்கா கணவர் என்றால் சரிதான். 2ம் எதிரி எனது தந்தை என்றால் சரிதான். இருவரும் குன்னம் கிராமம் என்றால் சரிதான். 2ம் எதிரிக்கு 3 மகள்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் வானூர் வட்டம் பரிக்கல்பட்டு பஞ்சாயத்து சிறுநாவூர் கிராமம் என்றால் சரிதான்.

எனது கணவர் எங்களுக்கு திருமணமானதற்கு முன்பிலிருந்து சிங்கப்பூரில் வேலை செய்து வந்தார். 2 வருடங்களுக்கு முன்பு வரை அங்கு தான் வேலை செய்தார்.

எனது புகாரில் எந்த தேதி எந்த வருடம் எந்த மாதத்தில் எங்கு வைத்து யார் முன்னிலையில் எதிரிகளுக்கு நான் பணம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு எதிரிகளுக்கும் வெவ்வேறு தேதிகளில் தான் பணத்தை கொடுத்தேன். மேற்படி விவரம் எனது புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரிகளுக்கு நான் பணம் கொடுத்ததற்கு ஆதாரம் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது என்னை தவிர வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை பெறுவதற்கு எதிரிகள் வீட்டிற்கு செல்லாமல் சவுக்கு தோப்புக்கு ஏன் சென்றேன் என்றால் எதிரிகள் வீட்டில் இருக்கவில்லை அங்கு தான் இருந்தார்கள்.

நான் சவுக்கு தோப்பிற்கு சென்றபோது அங்கு மரம ் வெட்டுபவர்கள் மற்றும் லோடு ஏற்றுபவர்கள் ஆகியோரும் இருந்தார்கள். மேற்படி விவரத்தை எனது புகாரில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் அடிபட்டு சிகிச்சை பெற்று மறுநாள் காவல் நிலையம் சென்றபோது போலீசார் ரிப்போர்ட் எழுதி வைத்திருந்தார்கள். அப்போது புகார் கொடுக்கிறீர்களா என்று கேட்டார்கள் அதனால் எழுதி வைத்திருந்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன்.

வானூர் அரசு மருத்துவமனையிலிருந்து வானூர் காவல் நிலையத்திற்கு 2 பர்லாங் தூரம் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வானூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு இருசக்கர வாகனத்தில் ஒருவர் என்னை பிடித்து கொண்டு அமர்ந்து சென்றேன். எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன்என்றால் இரவு 7 ரூ 8 மணிக்கு சென்றேன்.

நான் வைத்தியம் எடுத்துக்கொண்டு சொந்த ஊருக்கு சென்றுவிடடேன் என்றால் சரியல்ல. வைத்தியம் எடுத்துகொண்டு நான் வானூர் காவல்

நிலையத்திற்கு சென்றேன். வானூர் மருத்துவமனையில் நான் சிகிச்சைக்கு சென்றபோது வானூா காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து தகவல் தெரிவித்துவிட்டார்கள். அதேபோல் நான் ஜிப்மர் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்கு சென்றபோதும் காவல் நிலையத்திற்கு தகவல் அனுப்பிவிட்டார்கள்.

போலீசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்று எனக்கு நினைவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எனக்கு ஏறபட்ட காயத்தை நானே ஏற்படுத்திகொண்டு வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் 2 காணி இடம் என்றால் சரிதான். தோப்பை எவ்வளவு ரூபாய்க்கு விற்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நானும் எனது கணவரும் சேர்ந்து கொண்டு தோப்பு விற்ற பணத்தில் பங்கு கேட்டு தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. அப்போது லாரியில் கட்டை ஏற்றிக்கொண்டு இருந்தார்கள் என்றாலும் அதை ஏற்ற விடாமல் நாங்கள் தடுத்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு நாங்கள் தடுத்ததை தடுக்கவேண்டாம் என்று அந்த வியாபரி எனது தந்தையிடம் முறையிட்டார் என்றால் சரியல்ல. உடனே எனது கணவர் உள்ளூரில் உள்ள பெண்களுக்கு மட்டும் தான் பங்கு கொடுப்பார்கள் என்றும் எங்களுக்கு தர மாட்டார்கள் என்று கீழே கிடந்த தடியை எடுத்து எனது தந்தையை தாக்கி விட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் தான் எனது தந்தையை தாக்கினார் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தை கேள்விபட்டுதான் 1ம் எதிரி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. அவர் வந்ததை பார்த்துவிட்டு அவரிடம் இருந்து தப்பிப்பதற்காக நானும் எனது கணவரும் அங்கிருந்து ஓடிவிட்டோம் என்றால் சரியல்ல. அவ்வாறு ஓடம்போது எனது காலில் புடவை தடுக்கி கீழே விழுந்து சவுக்கு வேர்களால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

அதன்பின்னர் தான் நான் ஊரக்கு சென்று வக்கீலை அழைத்துகொண்டு காவல் நிலையம் சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சிறுநாவலூர் கிராமம் என்றாலும் பரிக்கல்பட்டு பஞ்சாயத்தில் வருவதால் மயிலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்டது என்றால் சரியல்ல. குன்னம் கிராமம் தான் வானூர் காவல் நிலைய எல்லைக்குள் அடங்கும் என்றால் சரியல்ல.

நாங்கள் எனது செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் பொய்யாக புகாரை கொடுத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாகவும அந்த பணத்தை எதிரிகள் தர மறுத்ததாக எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனது தந்தை எனது முடியை பிடித்துகொண்டார் என்றும் எனது மாமா என்னை தலையில் தாக்கினார் என்ற விவரத்தை எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் இனிமேல் பணம் கேட்டு வந்தால் எங்களை வெட்டி புதைத்து விடுவேன் என்று கூறியதாக எனது புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

Sd/- XXXX,

நீதித்துறை நடுவர்,
வானூர்.